20th January 1965]

போக்கு வரத்துச் செலவுக்குக்கூட கட்டுப்படியாவதில்லை. ஆகவே அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவது இன்னும் செம்மையாக அவர்கள் நடந்துகொள்வதற்கும், கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிடைப்பதற்கும் நல்ல அனுகூலமாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எல்லா இடங்களிலும் ப்ரைமரி சுகாதார நிலையங்கள் ஆரம்பித்துவிட்டால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. இன்றைய தினம் ப்ரைமரி சுகாதார நிலையங்கள் ஏற்பட்டுள்ள இடங்களில் டாக்டர்கள் வாரத்திற்கு இரண்டு முறை சப்செண்டர்களுக்குப் போய்வருகிறார்கள். இது கிராம மக்களுக்கு வைத்திய வசதி பெற உதவியாய் இருக்கும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தற்போது பஞ்சாயத்து கூட்டு மன்றங்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் லோகல் பண்டு ஆஸ்பத்திரிகளில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப் போடவேண்டுமென்றால் அனுமதி வழங்கப்படுவதில்லை. அந்த டாக்டர்களுக்கு ஆகும் செலவை அவர்களே சரிக்கட்டிக்கொள்ளத் தயாராக இருக்கும் போது அனுமதி வழங்குவதற்கு முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் நியமிக்கப்படுவதற்கே எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிடைக்கவில்லை ; அதனால்தான் அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆனாலும் இந்த டாக்டர்களும்கூட நல்ல அனுபவம், திறமை மிக்கவர்கள் தாம்.

ஹௌஸ் சர்ஜன்களுக்கான கௌரவ ஊதியம்

*** 26 கேள்வி.— திரு. வி. எஸ். எஸ். மணி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் ஹௌஸ் சர்ஜன்களுக்குத் தற்போது கொடுக்கப்படும் கௌரவ ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

(இ) முதுநிலை ஹௌஸ் சர்ஜன்கள் தனியே மருத்துவம் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்களா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) No.

மேல்மட்ட நீர்த்தொட்டிகள்

*** 27 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1963-64 முடிய எத்தனை மேல் மட்ட நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன?

(இ) எத்தனை தொட்டிகளுக்கு (ஓவர் ஹெட் டாங்க்) மின்சார இணைப்பு கொடுக்கவில்லை? காரணமென்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஏழு.